திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு பூம்புகார் நகரம் புதிய சிறப்புப் பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரக் காட்சிகளை உருவகப்படுத்தும் சிற்பக் கலைக்கூடம் அமைக்க மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கால்கோள் நடத்தியிருக்கிறார்கள். அதையொட்டி உல்லாசப்பயணிகள் நிறையப்பேர் வந்து பார்த்துச் செல்வதால் அங்கு உல்லாசப்பயணிகள் விடுதி அமைக்க உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கால்கோள் விழா நடத்தியிருக்கின்ற அந்த எண்ணம் நல்ல முறையிலே வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு, உலகப்பயணிகள் அதிகமாக வருவதற்குக் கவனத்தை ஈர்க்கின்ற நிலையில் பூம்புகார் இடம் பெற்றால், பிறகு பயணிகள் மாளிகை பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, பண்டைப் பூம்புகார் இருந்த இடத்தை ஆராய்ச்சி செய்ய திரு. மணவாள ராமானுஜம் அவர்களை முந்திய அரசாங்கத்தில் அமைத்தது உண்மையா ? அதுபற்றி இந்த அரசுக்கு ஏதேனும் விவரம் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டது அல்ல.

திரு. கே. விநாயகம் : சார், பண்டைய காலத்து பூம்புகார், அதாவது இலக்கியத்திலே பெருமையாகச் சொல்லப்படும் பூம்புகார் இப்பொழுது இல்லை என்றும், அதைக் கடல் விழுங்கி விட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் புதிய பூம்புகார் யாரால் நிறுவப்பட்டது, அதற்கு கால்கோள் விழா ஏன் செய்ய வேண்டும். இதை விளக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பழைய சிறப்புக்குரிய பூம்புகார் நகரம் இங்குதான் இருந்ததாகக் கல்வெட்டுக்களின் மூலமாகத் தெரிகிறது. இதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் சரியான பதிலைத் தரலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கனவே உள்ள பூம்புகாரையொட்டித்தான் இந்த பூம்புகார் இருக்கிறது. ஒரு பகுதி அழிந்துதான் போய்விட்டது. இப்பொழுதுள்ள பூம்புகாரில் 6 அடிக்குக் கீழே தோண்டிப் பார்த்தால் ரோமானிய நாட்டு நாணயங்கள் கிடைத்ததாலும், ஜாடி ஓடுகள் கிடைத்ததாலும் இது அதன் பகுதிதான்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, இன்று பூம்புகார் என்று சொல்லப்படும் இந்தப் பகுதிக்கு காவிரிப்பூம்பட்டிணம் என்று ஒரு பெயரும் உண்டு. காவிரிப்பூம்பட்டிணத்தைக் கடல் விழுங்கி விட்டதென்றும், காவிரி கடலிலே கலப்பதாலே புகார் என்று சொல்லப்படுகிறது என்று கூறப்படுகிறதே அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உண்மையை ஒத்துக்கொள்கிறேன்.

கப்பலூர் தியாகராசர் ஆலை.

***118 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கப்பலூர் தியாகராசர் ஆலையில் வேலை செய்பவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன ?

(உ) மற்றுமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது குறித்து நிர்வாகத்தினர் அரசிடம் மனுச் செய்துள்ளனரா ?

(எ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

1968 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) சுமார் 360 பேர்கள்.

(இ) 56 பேர்கள்.

(உ) இல்லை.

(எ) வினாவிற்கு இடம் இல்லை.

அறந்தாங்கி துணைப்பதிவாளர் மேல் புகார்.

*119 **வினா—திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி துணைப்பதிவாளர் பேரில் அழியாநிலை தி.மு.க. செயலர் புகார் மனு கொடுத்திருக்கிறாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

DR. H. V. HANDE : Is it a fact that some complaint from some source was made ? Was there any complaint against this officer from any source ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. எம். பெரியசாமி என்பவரிட மிருந்து ஒரு புகார் வரப்பட்டது. அதை மேலதிகாரி விசாரித்து அது போன்ற குற்றச்சாட்டுகள் மேலும் எழாவண்ணம் சப்-ரிஜிஸ்தார் நடந்து கொள்ள வேண்டுமென்று எச்சரித்திருக்கிறார்.

தொழிலாளர்கள் ஓய்வுபெறும் வயது.

*120 **வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாலை, மோட்டார் இன்ஜினீயரிங், சிமெண்டு, ஆஸ்பஸ்டாஸ், டீ, காப்பி, போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலா ளர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், இம்முறை என்று முதல் அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, இவ்விஷயத்தை மீண்டும் புன ராலோசனை செய்ய உத்சேம் உண்டா ? வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதால் கோவையிலே 20,000 பஞ்சாலை, இன்ஜினீயரிங் தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களே, இனிமேலாவது 58 வயதானவர்களுக்கு "ஓல்ட் ஏஜ் பென்ஷன் ஸ்கீம்" கொண்டுவர உத்தேசம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி ந. செ. மாதவன் : இந்தக் கேள்வி ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா என்பதைப் பற்றியது. வேலை யில்லாத் திண்டாட்டம் இருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். அதுவே அதற்கு விடையாக அமையும்.

திரு. கே. என். குமாரசாமி : சார், ஓய்வு பெறும் வயதை 60-க்கு உயர்த்தாவிட்டாலும் அந்த வேலையிலிருந்து போகும் குடும்பத்தைச் சேர்ந்த வர்களின் குழந்தைகளுக்கு அந்த ஆலைகளில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடிய நிலைமையை அரசாங்கம் உண்டாக்குமா ? அதாவது வாரிசு முறையை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வாரிசு முறை அமைப்பது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று இந்தியத் தலைமை நீதிமன்றம் சொல்லி யிருக்கிறது. எனவே, சட்டத்திலே அதை உருவாக்க முடியாது. இப் பொழுது ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு நடைமுறையில் இருக்கின்றன.